செ.வெ.எண்.307 நாள்.13.05.2018

**திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடி நகராட்சி சிந்தாமணி பகுதியில் ரூ.52.00 இலட்சம் மதிப்பில் குடிநீர் திட்டப்பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.**

**********

திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடி நகராட்சி சிந்தாமணி பகுதியில் ரூ.52.00 இலட்சம் மதிப்பில் குடிநீர் திட்டப்பணிகளை இன்று (13.05.2018) மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்கள். வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.மனோகரன் அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் பொதுமக்கள் நலனில் அக்கரையோடு செயல்பட்டு வரும் தமிழக அரசு எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடி நகராட்சி பகுதியில் பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் ரூ.52 இலட்சம் செலவில் சடையநேரி கண்மாயில் 10 ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து சுமார் 10.00 இலட்சம் லிட்டர் குடிநீரை அதிலிருந்து கிடைக்கப்பெறும். கண்மாயின் உட்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சேகரிப்பு கிணற்றில் (Collecting well) நிரப்பி அங்கிருந்து சுமார் 2.00கிலோ மீட்டர் தூரம் குழாய் அமைத்து சிந்தாமணி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகே மேலும் ஒரு தரைமட்ட நீர்தேக்க தொட்டி அமைத்து, அதிலிருந்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு நீரேற்றம் செய்து, இந்நகரின் 3வது வார்டு முதல் 8வது வார்டு வரை 7 வார்டுகளுக்கு சுமார் 25000 மக்களுக்கு வறட்சி காலத்தில் கோட்டமலையாறு குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்கும். இத்திட்டம் கோடைகால வறட்சி நிவாரணத்திட்டம் 2017–2018 மற்றும் பொது நிதியின் கீழ் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இன்று முதல் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என பேசினார்.

பின்னர், புளியங்குடி நகராட்சி அலுவலகத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பில் நகர்மன்ற கூடம் புனரமைக்கப்பட்டுள்ளதை திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் புளியங்குடி நகராட்சி ஆணையாளர் திரு.பவுண்ராஜ், கடையநல்லூர் வட்டாட்சியர் திரு.தங்கராஜ் முக்கிய பிரமுகர்கள் திரு.மூர்த்தி பாண்டியன், திரு.வெங்கடேசன், திரு.பரமேஸ்வரபாண்டியன், திருமதி.தேவகி குழந்தைவேலு, திரு.சாகுல்ஹமீது, திரு.ஆறுமுகம், உட்பட அரசு அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.